


திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திண்டுக்கல்,ஆத்தூர்,பழனி,நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம் பழனி சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ. பி.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் வழக்கறிஞர் செல்வக்குமார், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் கம்பம் பாண்டியன், திண்டுக்கல் மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன்,பிலால் உசேன், மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி,மாநகர கழக செயலாளர் துணை மேயர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ்,பகுதி செயலாளர்கள் சந்தோஷ் முத்து, ஜானகிராமன்,ராஜேந்திரகுமார்,சந்திரசேகர் சூசைராபர்ட், பஜ்லுல்ஹக் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை நகர, ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள் சார்புஅணி நிர்வாகிகள் தேர்தல் வார்டு பொறுப்பாளர்கள் உடன் இருந்தனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. நினைவுதினம்!

## திருவுருவச் சிலைக்கு பேரவைத் தலைவர் மு.அப்பாவு மாலை அணிவித்து மரியாதை!

நெல்லை, நவ.19-

நெல்லை மாவட்டம் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மாநகராட்சி எதிரில் உள்ள வ.உ. சிதம்பரனார் மணி மண்டபத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் முழுதிரு உருவச்சிலைக்கு சட்டப் பேரவை தலைவர் மு. அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி மேயர்.கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், முன்னாள் அமைச்சர் மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு தெரிவித்ததாவது.

நமது நாட்டின் விடுதலைக்காக சொத்து சுகங்களையும்,சொந்த பந்தங்களையும் இழந்து போராட்டக் களத்தில் இன்னுயிர் ஈந்த தியாகிகள் ஏராளம்.அப்படிப் போராடிய தியாகச் செம்மல்தான் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள். அன்றைய கால வழக்கப்படி திண்ணைப் பள்ளிகூடத்தில் படிப்பை ஆரம்பித்தார்.இரவு நேரங்களில் ஆங்கிலக் கல்வியும் பயின்றார்.வசதியான குடும்பத்தில் பிறந்த வ.உ.சிதம்பர னார் அவர்கள் நன்றாக படித்து வழக்கறிஞர் பட்டம் பெற்று ஒழுக்கம் வாய்மை, பிறர் நலம் பேணல் ஆகிய நற்குணங்களைப் பெற்று, அவற்றை வாழ்வின் குறிக்கோள்களாக கொண்டிருந்தார். ஆங்கிலேயர்களின்ஆதிக்கத்தை அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல்,வணிக ரீதியாகவும் வீழ்த்திட 'சுதேசி நேவிகேஷன் கம்பெனி" என்ற கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். அதனாலேயே கப்பலோட்டிய தமிழன் என்று புகழ்ப் பெற்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளை "தியாகத் திருநாள்" எனக் கடைப்பிடிக்குமாறு 3.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி நம் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மையே அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும்,தாய் நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்து வாழ்கின்ற கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89வது நினைவு நாளை தியாகத் திருநாளாக தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.

முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் தியாகிகளின் புகழை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதோடு, இளம் தலைமுறை யினர் சுதந்திரப் போராட்ட வீரர்களை தெரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கான மணி மண்டபங்கள், நினைவு சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சுதந்திரப் போராட்டத்திற்கு பாடுபட்டவர்களை நினைவு கூர்ந்து போற்றும் அரசாக தமிழ்நாடு அரசு திகழ்ந்து வருகிறது. இவ்வாறு சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ்,நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி, மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா,மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட்மேரி, ராஜேஸ்வரி,உலகநாதன்,அனார்கலி, அல்லா பிச்சை, களக்காடு நகர்மன்ற துணைத் தலைவர் ராஜன்,ஒன்றிய செயலாளர் ஆரோக்கிய எட்வின், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன் உட்பட அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதி பரமக்குடி தெற்கு நகர் 36,37,38,39,48,49 ஆகிய பாகங்களை உள்ளடக்கிய பகுதிகளில் நடைபெற்று வரும் SIR பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் முன்னாள் அமைச்சர் மருத்துவர் சுந்தர்ராஜ்,பரமக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கொடி சந்திர சேகர்,நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி ,நகர் மன்ற உறுப்பினர்கள்,நகர் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன்னாப்பூர் கீழ்பாதி பொ.செகதீசன்

### நவம்பர் 19 (1980)



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகம் தொடங்கிய காலத்திலிருந்து தீவிரமாக கழகப் பணியாற்றியவர்.

திராவிடநாடு, முரசொலி, நம்நாடு, மாலைமணி ஆகிய கழக இதழ்களை வாங்கி, அதனை பொதுமக்களுக்கும், தோழர்களுக்கு வழங்கி கழக கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.


ஒரத்தநாடு, பொன்னாப்பூர் கீழ்பாதி கிளைக் கழகச் செயலாளராகவும், அவைத் தலைவராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1952 முதல் 1978 வரை தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவர் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



கப்பலோட்டிய தமிழர் ஐயா வ.உ.சி அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தியதுடன், அங்கு நடைபெற்ற 89வது குருபூஜை தின விழாவில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் கலந்து கொண்டார். உடன் தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சுதந்திரப் போராட்டத் தியாகி வ.உ. சிதம்பரம் பிள்ளையின் 89வது குருபூஜை விழாவை முன்னிட்டு திண்டுக்கல்லில் அவரது திருவுருவச் சிலைக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் மாநகர் செயலாளர் துணை மேயர் ராஜப்பா,மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை, சார்புஅணி நிர்வாகி இல.கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89 வது நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை பாளையங்கோட்டை வ.உ.சி.மைதானத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர்,பாளை சட்ட மன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் முருகன்,நெல்லை மாநகர மேற்கு பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் துணை மேயர் ராஜ்,பகுதி பொறுப்பாளர்கள் பூ.சுப்பிரமணியன், அண்டன்செல்லத்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் வழிக்காட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் பாளையங்கோட்டை தெற்கு ஒன்றியம்,ரெட்டியார்பட்டி பாகம் எண் 138,139,140,141,142ல் வக்காளர் கணக்கீட்டு (SIR) படிவம் நிரப்பும் முகாமை ஆய்வு செய்தார்.நிகழ்வில் பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன்,தெற்கு ஒன்றிய செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ், ஆதிபரமேஸ்வரன்,இசக்கிபாண்டி, சுரேஷ் பாக்கியம்,சுரேஷ்,சரவணன், சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.